# தமிழ் வளர்ச்சியில் இந்து சமய கீர்த்தனைகளின் பங்கு

முனைவர். பா. வித்யா சதாசிவா

48

**ஆய்வு சுருக்கம்:**

இந்து சமயத்தையும் தமிழ் மொழியையும் இரு கண்களாக பாவித்து தமிழிசை மூவர் அனைத்து தரப்பு மக்களிடமும் இசைத்தமிழ் நாடகத்தமிழ் மூலம் சைவ வைணவ சாக்த கௌமார பக்தியை பறைசாற்றினர். அவ்வகையில் தமிழிசை மூவரின் இந்து சமய படைப்புகளுள் இசைக் கீர்த்தனைகள் என்ற வடிவில் தமிழ் மொழி எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**முன்னுரை**:

சிலப்பதிகாரம் தொடங்கி பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, தொல்காப்பியம், முதலிய நூல்களில் பண்டைய தமிழ்ர் பலவகை கூத்துகளில் இசை, நடனம், நாடகம், வாத்தியங்கள் என இசையுடன் கலந்து வாழ்ந்துள்ளனர். இப்பாடல்களின் மூலம், தமிழரின் வாழ்க்கை, மொழி, தெய்வ வழிபாடு, உணவு, இசைக்கருவிகள், இயற்கை வளம் என பல குறிப்புகளை நாம் அறிகிறோம்.

பக்திஇலக்கியம் என சிறப்புப் பெற்ற தேவாரம் திருவாசகம், பாசுரங்கள், திருப்புகழ், திருப்பாவை, என தமிழ்ப் புலவர்களான நாயன்மார்களும், ஆழ்வார்களும், பக்தியால் பல தலங்களுக்கு சென்று மனமுருகிப் பாடியதால், மூர்த்தி, தலம், தீர்த்தம் நிகராக “பாடல் பெற்ற தலம்" “மங்களாசாசனம் செய்யப்பெற்ற தலம்" என தலமே இத் தெய்வப் புலவர்களால் பெருமை அடைகின்றது.

**தேவரமும் கீர்த்தனையும்:**

காரைக்கால் அம்மையாரும் தேவார மூவரும் பல்லவி அமைப்பிற்க்கு வழி காட்டினர்". தேவாரத்தின் நான்கு வரிப்பாடல்களில் நான்காவது வரியின் கடைசி வார்த்தை பதிகத்தின் பத்து பாடல்களிலும் மீண்டும் மீண்டும் வந்துள்ளது.

“.... நற்றுணை ஆவது நமசிவாயவே

....நாவினுக்கு அருங்கலம் நமசிவாயவே” 4:11

பக்திக் கீர்த்தனைகள், சைவ வைணவ கௌமார சாக்த நெறியினை, பாரத தேச பக்தி, தேசத்தின் பெருமை ஆகியவற்றை கருத்தாகக் கொண்டு, தமிழ் சொற் செறிவுடன் செவ்விசை ராகங்களும் தமிழ் பண்களையும் கொண்டு இயற்றப்பெற்றிருக்கும்.

**சீர்காழித் தமிழிசை மூவர்:**

எதுகை, மோனை, இயைபு, முதலிய யாப்பு தொடைகளை அமைத்து, “கீர்த்தனைகளில் பல்லவி சரணங்கள் அமைத்ததில் சீரிய செவ்விசை வழிகாட்டிகள் “ சீர்காழித் தமிழிசை மூவர்.

முத்துத்தாண்டவர் (1560-1640), மாரிமுத்தாபிள்ளை(1712-1787), அருணாசல கவிராயர்(1711-1778) மூவரும் சீர்காழி தமிழிசை மூவர் எனப்படுவர்.

ஒரு பல்லவி என்பது கட்டுரையில் தலைப்பை போன்றது. சரணங்களில், பல்லவியின் தலைமைக் கருத்துக்கள் மலர்ந்து, விரிந்து பல்லவியோடு சென்று சேரும். 4அடி முதல் 8 அடிவரை சரணங்கள் பாடியுள்ளனர்.

**முத்துத்தாண்டவர்:**

கோயில்களில் இசைக்கருவி வாசிக்கும் பாரம்பரியத்தில் வந்தவர். இவரது பெற்றோர் இட்ட பெயர் தாண்டவர். இவரும், குல முறைப்படி, மத்தளம் வாசித்து வந்தார். பிறகு அவருக்கு கொடிய குன்ம நோய் ஏற்பட்டு கோவிலில் வாசிக்க முடியாமல் கஷ்டப்பட்டு அந்த தொழிலை விட்டுவிட்டார். ஆனால் இசை மீது கொண்ட பற்றால் நடன மங்கையரிடம் கீர்த்தனைகளை கற்கத் தொடங்கினார். இதை அந்த ஊராரும், குடும்பத்தாரும் சரியாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆதலால் வீட்டை விட்டு வெளியேறினார். அப்போது ஒரு நாள் கோவிலில் நடை சாற்றும் நேரம் உணராமல் தூங்கிவிட்டார். கோவில் மூடப்பட்டது. அப்போது நள்ளிரவில் வலியால் துடிக்க, உமா தேவி சிறு குழந்தை வடிவில் காட்சி தந்து உணவு கொடுத்து தில்லையில் கூத்தப்பெருமானை வேண்டிப் பாடு. பாடலின் முதல் வார்த்தை கோவிலில் உனக்கு கேட்கும் என அருளினார்.

**தமிழிசைக்கு இவர் தொண்டு:**

“பூலோக கயிலாயகிரி” என்ற வார்த்தை முதலில் செவியில் கேட்க, பவப்ரியா ராகத்தில்,

“பூலோக கயிலாயகிரி சிதம்பரமல்லாத
புவனத்தில் வேறு முண்டோ” என இயற்றினார்.

முத்துத்தாண்டவர் தாள ஞானம் பெற்றவர். ஆதலால் பல கீர்தனைகளில் தத்தகாரம் அமைத்தள்ளார். எடுத்துக்காட்டாக:

பல்லவி:

“ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கைக் காணக் கண்
ஆயிரம் வேண்டாமோ”

அனுபல்லவி:

ஆர நவமணி மாலைகள் ஆட-ஆடும்
அரவம் படம் எடுத்தாட
சீரணி கொன்றை மலர்த்தொடை யாட
சிதம்பரத் தேர் ஆட
பேரணி வேதியர் தில்லை மூவாயிரம்
பேர்களும் பூசித்துக் கொண்டு நின்றாட
காரணி காளி எதிர்த்து நின்றாட
கனக சபை தனிலே..(ஆடிக் கொண்டார் அந்த..)

இக்கீர்த்தனம் பரத நாட்டியத்திற்கும் பயன்படும் படி தாள அமைப்புடன் சொற்கள் எதுகை மோனை இயைபுடன் அமைத்துள்ளார்.

கீர்த்தனைகளில் முதல் முதலில் நீண்ட தாளக் கட்டுகளையும் தாளக் கோர்வைகளையும் அமைத்துள்ளார். இன்றைய நட்டுவாங்க அமைப்பிற்கு இவரின் பக்தியில் தோய்ந்த தாள ஞானமும், தமிழ் ஆர்வமும், கற்பனை வளமும் கொண்ட கீர்தனைகளே காரணம்.

**மாரிமுத்தாப்பிள்ளை:**

தில்லை விடங்கன் சிற்றூரைச் சேர்ந்தவர். சிதம்பர நடராசர் மீது கொண்ட பக்தியாலும், தமிழ் மீது உள்ள காதலாலும், யாப்பமைப்பும், சொற்செறிவும் கொண்ட தில்லை விடஙனின் பாடல்களை இயற்றியுள்ளார்.

**தமிழிசையில் இவர் தொண்டு:**

சிதம்பரேசர் விறலி விடுதூது, வருணாபுதரி ஆதிமூலேசர் குறவஞ்சி, ஆதிமூலேசர் நொண்டி நாடகம், அநீதி நாடகம், புலியூர் சிங்கார வேலவர் பதிகம், விடங்கர் பதிகம், நடராசர் மீது 50 இசைப் பாடல்கள், வண்ணங்கள்.

இவருடய பாடல்கள் 50ல், 25 மட்டுமே கிடைத்துள்ளன. பழிப்பது போலப் புகழும் முறையில் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்.

….வீடும் அம்பலமாகி நீரும் அந்தரமானீர், வேளை பொல்லாப்பகியே-- விலாசினி ராகம், சாப்பு தாள கீர்த்தனை.

….என்ன பிழைபுன்றன் பிழைப்போ --வேளாவளி ராகம், ஆதி தாளம்.

….உம்மைப் போல் ஆட்டையெடுத்து அம்பலத்தில் நிற்பார் ஒருவரைக் காணேன் ஐயா - பானுகீர்வாணி, ஆதி தாளம்.

….என்னேரமும் ஒரு காலைத்தூக்கிக் கொண்டு இருக்கிறவகை ஏதையா - தோடி ராகம், ஆதி தாளம்.

….பாருங்கள் வந்து பாருங்கள், ஆட்டுது பாம்பு, பிடாரனையே - வசுகரி ராகம், ரூபக தாளம்."

என ஆன்மீக உட்கருத்துடன் சிவ புராணக் கதைகளின் குறிப்புகளுடன் பல அபூர்வ ராகங்களில் பாடி இசைத்தமிழ் பக்தி என அனைத்தும் பாமர மக்களையும் சென்றடையும் படி ஒருங்கிணைத்த சிறப்பு பெற்றுள்ளார்.

தில்லை என்பது ஆலய முத்திரை. தில்லைக்கு பதில் தென்கைலாசம், பொன்னம்பலம், பூலோக கைலாசம், புலியூர் என்ற முத்திரைகளைய்ம் பயன்படுத்தியுள்ளார்.

**அருணாசல கவிராயர்:**

தில்லையாடி என்ற சிற்றூரில் 1712 ஆம் ஆண்டு பிறந்தார். 5 வயதில் குலமுறைப்படி தமிழ்ப்பள்ளிக்கு சென்றார். இளமையிலேயே எந்தப் பாட்டையும், இன்னிசையுடன் பாடி கேட்போர்க்கு இன்பம் பொங்கும் படி பாடும் இயல்பு பெற்றவர்.

தாய் தந்தையை சிறு வயதிலேயெ இழந்தார். சைவ மடத்தில் அம்பலவாணக் கவிராயர் என்ற பண்டார சன்னதிகளிடம் 12 ஆண்டுகள் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும், சமய நூல்களையும் கற்று புலமை பெற்றார்.

**தமிழிசைக்கு இவர் தொண்டு:**

அவரை மிகவும் ஈர்த்த திருக்குறள் மற்றும் கம்பராமாயணம் தான் ஒப்பற்ற நீதி நூல் இலக்கியம் என உணர்ந்தார். இவற்றுள் கல்லார்க்கும், கற்றவர்க்கும் இன்பம் கொடுப்பது இராமாயணமே என்று உணர்ந்து, அந்த நூலை ஆழ்ந்து படித்து அனைவருக்கும் கற்பித்தார். இன்னிசையோடு உரை நிகழ்த்தியும் வந்தார்.

சீர்காழி தருமபுரி ஆதீன மடத்து தம்பிரான் சிதம்பரம் அடிகள் விருப்பத்திற்க்கு இணங்க, அருணாசல கவிராயர் அங்கேயே குடும்பத்துடன் வாழ்ந்தார். இக்காரணத்தினால் இவர் சீர்காழி கவிராயர் என அழைக்கப் பெற்றார்.

இங்குதான் இவர் அசோமுகி நாடகம், சீர்காழித் தலப் புராணம், சீர்காழிக்கோவை, அனுமார் பிள்ளைத் தமிழ் போன்ற நூல்களை இயற்றினார். தனது தமிழ் மாணவர்களான சட்டை நாதபுரம் வேங்கடராமர், கோதண்ட ராமர் என்ற இசை வானர்களுடன் தனது ராம நாடகத்திற்கு இசை அமைக்கும் வேலையை முடித்துக்கொண்டு, கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றிய திருவர்ங்கத்திலேயே அரங்கேற்றம் செய்ய வேண்டும் என ஆர்வம் கொண்டார். கோவில் அதிகாரிகள் மறுத்ததால் , “ஏன் பள்ளிக் கொண்டீரய்ய”" என்று மோகன ராக கீர்த்தனையைப் பாடினார்.

அரங்கன் கனவில் தோன்றி கம்பரைப் போல நீரும் நம்மை பாடுவீராக உமது நூல் அரங்கேறும் என்றார். அதிகாரிகள் கனவிலும் தோன்றி நூலை அரங்கேற்ற ஆணையிட்டார்.

அதிகாலை அதிகாரிகளுடன் கனவைச் சொல்ல, கவிராயரின் நூல் அரங்கேற்றத்திற்கு ஒழுங்கு செய்தனர். பலவகை பரிசுகளும் மரியாதைகளும் வழங்கினர். மணலி, புதுவை, உடையார் பாளயம் ஆகிய ஊர்களின் பெரியோர்கள் அவர் நூலைப் பற்றி உரையாற்ற அழைத்து பரிசுகளும் கௌரவமும் கொடுத்தனர்.

நாடகங்களில் உரை நடை சுருக்கமாகவும் கீர்த்தனைகள் அதிகமாகவும் பயன்படுத்தப்பட்ட காலம். இராம நாடகக் கீர்த்தனைகள் இராமயணக் கருத்துக்களை அப்படியே மொழிபெயர்த்து அமைக்கப்பட்ட கீர்த்தனைகள் அல்ல. கற்பனை வளம், வருணனைகள் மிகுந்தவை. இந்நூலை 6 காண்டங்களாக பிரித்துள்ளார்.

1, பால காண்டம், 2. அயோத்யா காண்டம், 3. ஆரணிய காண்டம், 4. கிஷ்கிந்தா காண்டம், 5. சுந்தர காண்டம், 6. யுத்த காண்டம் என்பவை.

கீர்த்தனைகளின் தலைப்பில் கீர்த்தனையின் கருத்தில் விருத்தங்கள்,101 தருக்கள் உள்ளன. இவை, பல்லவி அனுபல்லவி, சரணங்கள் கொண்டவை. விருத்தங்கள்பாடிய பிறகு தருக்கள் பாடப்படும். 127 விருத்தங்கள், 20 திபதைகள் ஈரடி பெற்றவை.

கதை நிகழ்ச்சியின் சுவைக்கேற்ற இராகங்ளையும் தாளங்களையும் அருணாசல கவிராயரே தமது மாணவர்களுடன் அமைத்துள்ளார். “மூல பலச் சண்டையைக் கேளும்" என்ற தரு 20 அடி பல்லவி கொண்டது. தரு என்பது கீர்த்தனை மறுபெயர் என்றும் கூருவர்.

ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துச்சுவாமி தீக்ஷிதர் ஸ்ரீ ச்யாம சாச்திரி சங்கீத மும்மூர்திகளுக்கு மூத்தவர்.

இவரது "ஏன் பள்ளிக் கொண்டீரய்யா ா" கீர்த்தனை அமைப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

"வந்தான் வந்தான் பரதா - ஸ்ரீ ரகுராமன் - மத்யமாவதி ராகம் அட சாப்பு தாளம் (தரு:92)

"பாய்ந்தானே அனுமந்த்தன் பாய்ந்தானே சுருட்டி ராகம் ரூபக தாளம்.-(தரு:49)

"இந்த சேதுவைக் கண்டால் போமே - மோகனம் ராகம் அட சாபு தாளம்.

"எனக்குள் இருப்பதம் நினைக்க வருவாய் இராமச்சந்திரா" - சௌராஷ்ட்ரம் ராகம் திரிபுட தாளம். (தரு:3)

"கண்டேன் கண்டேன் கண்டேன் சீதையை கண்டேன் ராகவா" - முகாரி ராகம் அட தாளம்.(தரு:26)

"ஆரோ இவர் ஆரோ - பைரவி ராகம் (தரு: 13)

போர் பற்றிய இவரது தருக்கள் மிகவும் நீண்டவை. மத்தளச் சொற்களுடன் தத்தகாரங்களும் பயன்படுத்தியுள்ளார்.

**முடிவுரை**:

மூவரின் தமிழ் பற்று, மொழிப் புலமை, இசை ஞானம், தெய்வ பக்தி இவை அவர்கள் வாழ்வின் கடினமான சூழலிலும் அறிவுச் செல்வத்தை தேடி புராணங்கள், கலை எனக் கற்று தேர்ச்சிப் பெற்றுள்ளனர்.

அவர்கள் உணர்ந்த சிவ பெருமானையும், இராமபிராணையும், கல்லாதவர் கற்றவர் என அனைவருக்கும் எடுத்துச்செல்ல வேண்டும் என்று, கீர்த்தனைகளை தமிழ் சொற்செறிவுடன் இலக்கண அறிவோடு அழகு படுத்தி, ராக தாள நுணுக்கங்களுடன், புராண கதைகளின் கருத்து ஆழத்துடன் பக்தியில் தோய்த்து இலகுவாக கொடுத்துள்ளனர்.

இவர்களைப் போலவே பாபநாசம் சிவன், கோபாலகிருஷ்ண பாரதி, கீர்த்தனைகளை இயற்றியுள்ளனர். மகாகவி சுப்பிரமணிய பாரதி அனைத்து தெய்வங்களின் மீதும் கீர்த்தனைகள் பாடியுள்ளார். அவரின் தேசப்பற்று கீர்த்தனைகள் குறிப்பிடத் தக்கவை.

தமிழிசைப் புலவர்களின் கீர்த்தனைகளை கேட்பவருக்கு, புலவர்கள் பெற்ற தமிழறிவும், இசைஞானமும், பக்தி உணர்வும், தேச பற்றும் கிடைக்கின்றன.

நன்றி!!!

**துணை நூற் பட்டியல்:**

1. தென்னக இசையியல் - திரு ஜானகிராமன்.ச.ஆர்.
2. தமிழிசைக்கலை களஞ்சியம் - திரு சுந்தரம் .வீ.ப.கா.